**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING (CODL), UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**வணிகமாணி பட்டப்படிப்பு 2017/2018 (வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**
**BACHELOR OF COMMERCE DEGREE PROGRAMME – 2017/2018 (EXTERNAL) (NEW SYLLABUS)**
**(SEMESTER BASED COURSE UNIT SYSTEM AND GRADE POINT AVERAGE EVALUATION)**

---

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை – 2020

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***அனுமதிக்கான தகைமைகள் :***

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) – 2017 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

  ***அல்லது***

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

***வணிக முதற்தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல் :***

- ஏற்கனவே வணிக முதற்தேர்வு அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்பு கோருவோர், உரிய தகமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு : இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பித்தலாகாது.**

***மாணவர் தெரிவு :***

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். (பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்).

***விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :***

1. ***விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர்***

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500/= இனை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2. ***தபால் மூலம் பெற விரும்புவோர்***

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk) தரப்பட்டுள்ள ரூபா 500/= இற்கான கொடுப்பனவுச் சீட்டை பதிவிறக்கம் செய்து, அருகில் உள்ள மக்கள் வங்கி கிளையொன்றில் கொடுப்பனவினை மேற்கொண்டு சுய முகவரியிடப்பட்ட ரூபா 45.00/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 x 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

***விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் :***

விண்ணப்பங்கள் யாவும்

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

என்ற முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாகவும் சமர்ப்பிக்க முடியும். மேலும் தபால் மூலமெனின், தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் - 2017/2018" என தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

***விண்ணப்ப முடிவுத்திகதி : 14.02.2020 (வெள்ளிக்கிழமை)***
***விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது***
மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
31.12.2019